# In the Court of the District Munsif, Eraniel

**Original Suit No. 7/2020** **Date:30.01.2026.**

**(PW1)-** பிரான்சிஸ் என்ற மரியபிரான்சிஸ்

**5 ம் பிரதிவாதி** தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. இந்த வழக்கு 5 ம் பிரதிவாதிக்கு எதிராக எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால் கேட்டுள்ளேன். என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் வீட்டை பார்க்காமல் கதவு எண கொடுத்துவிட்டார்கள். நான் 5 ம் பிரதிவாதிக்கு எதிராக எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றாலும் அவரை பொறுத்து எனது பிராதிலோ நிரூபண வாக்குமூலத்திலோ அவரை பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. 5 ம் பிரதிவாதி அரசு விதிமுறைகள் படி 4 ம் பிரதிவாதிக்கு வீடு கட்டுவதற்கு வரைபட அங்கிகாரம் முறையான ஆவணங்களை பரிசீலனைசெய்து ஆவணங்கள் முறையாக இருந்தப்படியால் அனுமதி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

2. எனக்கும் 5 ம் பிரதிவாதிக்கும் உள்ள தனிப்பட்ட விரோதத்தின் காரணமாக அவரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் 5 ம் பிரதிவாதி அவருடைய சொத்தை போக்குவரவு செய்வதற்காக 4 ம் பிரதிவாதியை துண்டி விடுவதாக எந்த வித முகாந்தரமும் இன்றி குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தேவையில்லாமல் 5 ம் பிரதிவாதியை கட்சி சேர்த்து அவருக்கு கஷ்டம் ஏற்படுத்தியதால் 5 ம் பிரதிவாதிக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும் என்றாலும் இந்த வழக்கு 5 ம் பிரதிவாதிக்கு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.